# சமுதாய உறவுகள்

**மனன வசனம்**

**எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும். 1பேதுரு 4:8.**

**ஆராய்ச்சிக்கு**

**1பேதுரு 2:13-23; 1பேதுரு 3:1-7; 1கொரி 7:12-16; கலா 3:27,28; அப் 5:27-32; லேவி 19:18.**

ஏப்ரல் 15 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

தன்னுடைய காலத்தில் நிலவிய சில இக்கட்டான சமுதாயச் சூழ்நிலைகளையும் பேதுரு தன் நிருபத்தில் நேரடியாக விவாதிக்கிறார். உதாரணமாக, அன்று அஞ்ஞான ரோம சாம்ராஜ்யத்தின் ஆளுகையின்கீழ்தான் அவர்கள் வாழ்ந்தார்கள்; அதுபோன்ற சீர்கேடும், ஒடுக்குதலும் நிறைந்த ஓர் அரசாங்கத்தின்கீழ் கிறிஸ்தவர்கள் எவ்வாறு வாழவேண்டும்? அதுபற்றி, பேதுரு தன் வாசகர்களுக்கு என்ன சொல்கிறார்? அது எவ்வாறு இன்று நமக்குப் பொருந்தும்?

எஜமான்கள் கொடுமையாகவும் அநியாயமாகவும் நடந்துகொள்ளும்போது கிறிஸ்தவ அடிமைகள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? இன்றைய முதலாளி-தொழிலாளி உறவுகளுக்கும், முதல் நூற்றாண்டு எஜமான்-அடிமை உறவுக்கும் வித்தியாசம் உள்ளது. ஆனாலும், பேதுரு கூறும் கருத்துகள், நியாயமில்லாமல் நடக்கும் முதலாளிமார்களிடம் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென அறிந்துகொள்ள நிச்சயம் உதவும். கிறிஸ்தவர்கள் மோசமாக நடத்தப்படும்போது எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு, தாம் மோசமாக நடத்தப்பட்டபோது கிறிஸ்து எவ்வாறு நடந்து கொண்டாரென்பதை பேதுரு உதாரணமாகக் காட்டுகிறார். 1பேதுரு 2:21-24.

கணவன்-மனைவி உறவு எப்படி இருக்கவேண்டும்? குறிப்பாக, மத நம்பிக்கை போன்ற அடிப்படை விஷயத்தில் அவர்களுக்குக் கருத்து வேறுபாடு உண்டாகும்போது எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும்?

இறுதியாக, சமுதாய - அரசியல் அமைப்பு சீர்கெட்டதாகவும், கிறிஸ்தவ விசுவாசத்திற்கு முரணானதாகவும் இருக்கும்போது, கிறிஸ்தவர்கள் எவ்வாறு அந்தச் சமுதாய அமைப்பைப் பார்க்கவேண்டும்?

2017, ஏப்ரல் 22 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## சபையும் அரசாங்கமும்

வேதாகமம் வெகுகாலத்திற்குமுன்பே எழுதப்பட்டதாக இருந்தாலும், இன்றைக்கு பொருத்தமான விஷயங்களும் பல அதில் உள்ளன; கிறிஸ்தவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடைய இருக்கவேண்டிய உறவும் அதில் ஒன்று.

குறிப்பிட்ட சூழ்நிலைகளில் நாம் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமென்று தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அரசியல் அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிவதால் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்க நேரிடும் ஒரு காலக்கட்டம்பற்றி வெளி 13 பேசுகிறது. அப்போது நாம் என்ன செய்யவேண்டுமெனத் தெளிவாகச் சொல்லிவிடலாம். (வியாழக்கிழமை பாடத்தைப் பார்க்கவும்.)

***பொதுவான சூழ்நிலைகளில். அரசாங்கத்திடம் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென 1பேதுரு 2:13-17 கூறுகிறது?***

ரோம அரசாட்சியின்கீழ் வாழ்ந்தவர்கள் அதன் தீமைகளை நன்றாகவே அறிந்திருந்தார்கள். சலனப்புத்தியும் பேராசையும் கொண்ட சிலர் இராணுவ அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்த சாம்ராஜ்யத்தை வளர்த்தார்கள். அதற்கு எதிராக இருந்தவர்களை வன்முறையால் அடக்கினார்கள். அவர்களுடைய கொடுந்தண்டனைகளில் திட்டமிட்ட சித்திரவதையும் சிலுவையில் அறைந்து கொல்லுதலும் இடம்பெற்றிருந்தன. பாரபட்சத்தோடு தனிச்சலுகை காட்டுவதும் ஊழலும் ரோம அரசாங்கத்தில் மிகுந்திருந்தன. ஆளும்வர்க்கத்தினர் முற்றிலும் கொடூரமாகவும் ஈவு இரக்கமின்றியும் அதிகாரம்செலுத்தினார்கள். இவற்றிற்கு மத்தியிலும், பேரரசர்முதல் ஆளுனர்வரையிலும் ராஜ்யத்தின் ஒவ்வொரு பொறுப்பிலுள்ளவர்களின் அதிகாரத்திற்கும் கீழ்ப்படியுமாறு தன் வாசகர்களிடம் வலியுறுத்துகிறார் பேதுரு. 1பேதுரு 2:13,14.

பேரரசர்களும் ஆளுனர்களும் தவறுசெய்கிறவர்களைத் தண்டிக்கிறார்கள்; நன்மைசெய்கிறவர்களைப் புகழ்கிறார்கள். 1பேதுரு 2:14. அவ்வாறு செய்து, சமுதாயத்தைப் பண்டுத்துவதில் முக்கியப் பங்காற்றுகிறார்கள் என்கிறார் பேதுரு.

குறைகள் இருந்தாலும், ரோம சாம்ராஜ்யம் நிலையான ஓர் அரசாங்கத்தை அமைத்தது. போர்கள் ஓய்ந்தன. கடுமையான தீர்ப்பு வழங்கினாலும், அது சட்டத்திற்கு உட்பட்டதாகவே இருந்தது. சாலைஅமைத்தது; தன் இராணுவத் தேவைகளைச் சந்திக்க காசு முறையை ஏற்படுத்தியது. அதனால் மக்களின் வளர்ச்சிக்கும் செழிப்பிற்கும் ஒரு நல்ல சூழ்நிலையை ரோம் உருவாக்கியது. இதன்படி பார்த்தால், அரசாங்கத்திற்குக் கீழ்ப்படியுமாறு பேதுரு சொல்வதில் அர்த்தம் இருப்பது புரிகிறது. எந்த அரசாங்கமும் பூரணமானது அல்ல; பேதுருவும் அவர் வாசகர்களும் வாழ்ந்தகாலத்திலிருந்த அரசாங்கமும் அப்படிப்பட்டதுதான். எனவே, அவர் சொல்வதுபோல, கிறிஸ்தவர்கள் நல்ல குடிமக்களாக இருக்கவேண்டும்; ஆளுகிறவர்கள் குறையுள்ளவர்களாக இருந்தாலும், முடிந்தவரையிலும் நாம் தேசத்தின் சட்டங்களுக்குக் கீழ்ப்படியவேண்டும்.

நல்ல அரசியல் சூழ்நிலை இல்லாதபோதும், கிறிஸ்தவர்கள் நல்ல குடிமக்களாக நடந்துகொள்வது ஏன் முக்கியம்? சிறிய அளவிலாவது, உங்கள் சமுதாயத்தை மிகச் சிறந்த ஒன்றாக மாற்ற நீங்கள் என்ன செய்யமுடியும்?

***1பேதுரு 2:18-23 வசனங்கள் சொல்வதின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வது சற்றுக் கடினம்தான். ஆனாலும், இதில் நமக்குள்ள முக்கிய நியதி என்ன?***

1பேதுரு 2:18-23 வசனங்கள் அடிமைத்தனத்தை ஆதரித்துப் பேசவில்லை; மாறாக, மாற்றமுடியாத சில இக்கட்டான சூழ்நிலைகளில் நாம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென்கிற ஆவிக்குரிய ஆலோசனையை அவை கொடுக்கின்றன.

1பேதுரு 2:18ல், 'வேலைக்காரர்' அல்லது 'அடிமை' என்று மொழிபெயர்க் கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை **ஓய்கிட்டேஸ்**; குறிப்பாக, வீட்டுவேலைக்காரரைச் சுட்டிக்காட்ட அந்த வார்த்தை பயன்படும். அடிமை என்பதற்கு பொதுவாகப் பயன்படுத்தப்படும் வார்த்தை **டூலாஸ்**; எபே 6:5இல் இந்த வார்த்தை இதே ஆலோ சனையைதான் அடிமைகளுக்குக் கூறுகிறது.

அந்தஸ்தின் அடிப்படையில் பல பிரிவுகள் ரோம சாம்ராஜ்யத்தில் காணப் பட்டன; அடிமைகள் சட்டப்படி தங்கள் எஜமான்களுக்கு சொந்தமானவர்களாக இருந்தார்கள்; அவர்கள் இவர்களை நன்றாக நடத்தலாம் அல்லது கொடுமைப்படுத் தலாம். போரில் தோற்கடிக்கப்பட்டோர், அடிமைகளின் பிள்ளைகள், கடன்களை அடைப்பதற்காக 'விற்கப்பட்டோர்' போன்றோர் அடிமைகள் ஆக்கப்பட்டார்கள். சில அடிமைகளுக்கு பெரும் பொறுப்புகள் கொடுக்கப்பட்டன. சிலர் தங்கள் எஜமான்களின் பண்ணைகளை நிர்வகித்தார்கள். சிலர் தங்கள் எஜமான்களின் சொத்தையும் தொழிலையும் நிர்வகித்தார்கள்; சிலர் தங்கள் எஜமான்களின் பிள்ளைகளுக்கு ஆசிரியர்களாக இருந்தார்கள்.

கிரயம்கொடுத்து அடிமையை விடுதலையாக்கமுடியும்; அதை 'மீட்டுக்கொள் ளுதல்' என்பார்கள். இயேசு நமக்காகச் செய்திருப்பதை இந்த வார்த்தையால்தான் பவுல் விளக்குகிறார். எபே 1:7; ரோமர் 3:24; கொலோ 1:14.

ஆதிகாலக் கிறிஸ்தவர்கள் பலரும் அடிமைகளாக இருந்திருக்கிறார்கள். தங்களால் ஒன்று செய்யமுடியாத ஒரு வழக்கமுறையில் அவர்கள் சிக்கியிருந்தார் கள். அதுவும் கொடுமையான, நியாயமற்ற எஜமான்களைப் பெற்றிருந்தவர்கள் இக்கட்டான சூழ்நிலைகளில் இருந்தார்கள்; நல்ல எஜமான்களைப் பெற்றிருந்தவர் களுக்கும் சோதனையான சூழ்நிலைகள் பல உண்டாயின. அடிமைகளாயிருந்த கிறிஸ்தவர்களுக்கு பவுல் சொல்கிற போதனைகளைத்தாம் புதிய ஏற்பாட்டின் பிற பகுதிகளும் கூறுகின்றன. கிறிஸ்து தம்மைக் கீழ்ப்படித்தி, சகித்துக்கொண்டது போல அவர்களும் தங்களைக் கீழ்ப்படுத்தி, சகித்துக்கொள்ள வேண்டும். 1பேதுரு 2:18-20. தவறுசெய்து தண்டிக்கப்படுவதால் எந்த நன்மையும் இல்லை. அநியாய மாக உபத்திரவத்தை அனுபவிக்கும்போதுதான் மெய்யான கிறிஸ்துவின் ஆவி வெளிப்படுகிறது. கிறிஸ்தவர்களும் அச்சமயங்களில் அவதூறாகப் பேசக்கூடாது; மிரட்டக்கூடாது; மாறாக, நியாயமாக நியாயந்தீர்க்கும் தேவனிடம் இயேசுவைப் போல தேவனை நம்பி, தங்களை ஒப்படைக்கவேண்டும். 1பேதுரு 2:23.

---

இங்கே பேதுரு சொல்லும் உண்மைகளை நடைமுறை வாழ்வில் நாம் எவ்வாறு அப்பியாசிக் கலாம்? அப்படியானால், நம்முடைய உரிமைகளுக்காக நாம் நிற்கமுடியாதா? உங்கள் பதில் களை ஓய்வுநாள் வகுப்பிற்குக் கொண்டுவாருங்கள்.

## கணவன்மாரும் மனைவிமாரும்

***எத்தகைய சூழ்நிலையில் 1பேதுரு 3:1-7 வசனங்களை பேதுரு கூறுகிறார்? இன்றைய சமுதாயத்தில் திருமண உறவிற்கு இவை எவ்வாறு பொருந்தும்?***

---

---

என்ன ஒரு குறிப்பிட்ட பிரச்சனையை மனதில்வைத்து பேதுரு பேசுகிறார் என்பதைக் காட்டும் ஒரு முக்கிய விஷயம் 1பேதுரு 3:1-7ல் உள்ளது. 'திருவசனத்திற்குக் கீழ்ப்படியாத' புருஷர்கள்பற்றி தான் பேசுவதாக பேதுரு கூறுகிறார். 1பேதுரு 3:1. அதாவது, கிறிஸ்தவளாகிய ஒரு மனைவி கிறிஸ்தவனல்லாத ஒருவனை மணம்புரிந்திருந்தால், எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமெனக் கூறுகிறார். இத்தகைய நிலையில் இன்று பலர் இருக்கிறார்கள்.

கிறிஸ்தவ விசுவாசத்தில் இல்லாத ஒருவனை மணம்புரிந்திருக்கும் ஒரு கிறிஸ்தவ மனைவி, பல இக்கட்டுகளைச் சந்திக்கக்கூடும். அப்போது அவள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும்? தன் கணவனைவிட்டுப் பிரிந்துவிடலாமா? கிறிஸ்தவ மனைவி விசுவாசியாக இல்லாத தன் கணவனைவிட்டுப் பிரியலாமென்று பேதுரு சொல்லவில்லை; பவுலும் அப்படிதான். 1கொரி 7:12-16. மாறாக, விசுவாசியல்லாத ஒரு கணவன் இருந்தால், மனைவி அவனுக்கு முன்னுதாரணமாக வாழவேண்டுமென்று பேதுரு கூறுகிறார்.

முதல் நூற்றாண்டு ரோமராஜ்யத்தில் அந்தந்தச் சமுதாயத்தைப் பொறுத்துதான் பெண்களின் உரிமை இருந்தது. உதாரணமாக, ரோமப் பெண்களை எடுத்துக்கொண்டால், சட்டப்படி சொத்துரிமையும் நிவாரண உரிமையும் இருந்தது; ஆனால், பேதுரு தன் நிருபத்தை யாருக்கு எழுதினாரோ, அந்தப் பெண்களுக்கு இந்த உரிமைகள் எல்லாம் இருந்திருக்க வாய்ப்பில்லை. முதல் நூற்றாண்டு சமுதாயங்கள் சிலவற்றில் அரசியல், அரசாங்கம், மதத்தலைமை ஆகியவற்றிலிருந்து பெண்கள் விலக்கப்பட்டிருந்தார்கள். பெண்கள் எந்த நிலையில் இருக்கிறார்களோ, அங்கு அவர்கள் கடைபிடிக்கவேண்டிய சில நற்குணங்களை பேதுரு கூறுகிறார். பயபக்தியோடு, கற்புள்ளவர்களாக நடக்கச்சொல்கிறார். 1பேதுரு 3:2. முடியலங்காரம், நகையலங்காரம், ஆடையலங்காரம் போன்ற வெளிப்புற அழகைவிட, உட்புற அழகில் ஒரு கிறிஸ்தவள் அதிக ஆர்வங்காட்டுமாறு சொல்கிறார். 1பேதுரு 3:3-5. ஒரு கிறிஸ்தவள் தன்னுடைய நல்ல நடத்தையால், தன்னோடு மிகவும் நெருங்கி வாழ்கிற தன் கணவனுக்கு கிறிஸ்தவ மதத்தைப் பரிந்துரைக்கிறவளாக இருப்பாள்.

மனைவிமார்களை அநியாயமாக நடத்துவதற்கு கணவன்மார்கள் இதை சாக்காக எடுத்துக்கொள்ளக்கூடாது. கணவன்மாரும் தங்கள் மனைவிமாருக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுமாறு பேதுரு கூறுகிறார். 1பேதுரு 3:7.

விசுவாசிகளல்லாத புருஷர்களுடைய கிறிஸ்தவ மனைவிகளைக் கருத்தில் கொண்டு பேதுரு பேசினாலும், ஒரு கிறிஸ்தவ திருமணத்தின் உன்னத நோக்கமும் சற்றே இங்கு காட்டப்படுகிறது. கிறிஸ்தவ தம்பதியர்கள் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் ஆதரவு அளிக்கவேண்டும்; தங்கள் அன்றாடச்செயல்களின்மூலம் தேவனைத் தொழுது, ஒளிவுமறைவற்ற ஒழுக்கத்தோடு வாழவேண்டும்.

***ரோமர் 13:1-7; எபே 5:22-33; 1கொரி 7:12-16; கலா 3:27,28 ஆகிய வசனங்களில் பவுல் சொல்வது 1பேதுரு 2:11-3:7ல் பேதுரு சொல்வதோடு எவ்வாறு ஒத்துப்போகின்றன?***

---

1பேதுரு 2:11-3:7ல் பேசப்படும் சில விஷயங்கள் குறித்துதான் பவுலும் பல இடங்களில் பேசுகிறார். அவர் சொல்கிற விஷயங்கள் 1பேதுருவில் சொல்லப் படும் விஷயங்களோடு மிகவும் ஒத்துப்போகின்றன. உதாரணமாக, பேதுருவைப் போல பவுலும் தன் வாசகர்களிடம், 'மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக்' கீழ்ப் படியும்படிக் கூறுகிறார். ரோமர் 13:1. ஆட்சியாளர்களை நியமிப்பவர் தேவன்; அவர்கள் நன்மைக்கு அல்ல, தீயசெயல்களுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள். ரோமர் 13:3. எனவே ஒரு கிறிஸ்தவன், 'செய்யவேண்டிய கட மைகளைச் செய்யவேண்டும்; எவனுக்கு வரிசெலுத்தவேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வைசெலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்த வேண்டும்; எவனுக்குப் பயப்படவேண்டியதோ அவனுக் குப் பயப்படவேண்டும்; எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணவேண்டும்.' ரோமர் 13:7.

விசுவாசியாக இல்லாத கணவனைத் திருமணம்செய்திருந்த பெண் முன்னு தாரணமான ஒரு வாழ்க்கை வாழவேண்டும் என்றும், அதன்விளைவாக அவரு டைய கணவனும் சபையில் சேரக்கூடுமென்றும் பவுல் வலியுறுத்துகிறார். 1கொரி 7:12-16. பரஸ்பர அன்புடையதாக கிறிஸ்தவத் திருமணங்கள் இருக்கவேண்டும் என்றுதான் பவுலும் கூறுகிறார். கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்ததுபோல ஒரு கணவன் தன் மனைவிமேல் அன்புகூரவேண்டும். எபே 5:25. மேலும் வேலைக் காரரும், தாங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதுபோல தங்கள் பூலோக எஜமான் களுக்குக் கீழ்ப்படியவேண்டும். எபே 6:5.

பிறகு, கலாச்சாரங்களின் அடிப்படையிலான கட்டாயச் சட்டங்களுக்கு இணங்கிப்போகவும் பவுல் ஆயத்தமாக இருந்தார். தன்னுடைய கலாச்சாரத்தில் எது மாற்றக்கூடியது, எது மாற்றக்கூடாதது என்பதையும் அவர் புரிந்துவைத்திருந் தார். மக்களைக்குறித்த சமுதாயத்தின் எண்ணத்தை மாற்றக்கூடிய ஒன்று கிறிஸ் தவ மார்க்கத்திற்குள்ளேயே இருப்பதையும் கண்டார். சமுதாய அமைப்பில் மாற் றத்தைக் கொண்டுவருவதற்கு எவ்வித அரசியல் புரட்சியையும் இயேசு கையில் எடுக்கவில்லை; அதுபோலத்தான் பவுலும் பேதுருவும் செயல்பட்டார்கள். மாறாக, சமுதாயத்தில் வாழ்கிற தேவபக்தியுள்ள மக்களின் மாற்றவல்ல செல்வாக் கால் தேவையான மாற்றம் உண்டாகமுடியும்.

---

கலா 3:27–29 வசனங்கள் முற்றிலும் இறையியல் ரீதியான வார்த்தைகள்தாம். ஆனாலும், இயேசு தங்களுக்காகச் செய்திருப்பதை எண்ணி, கிறிஸ்தவர்கள் எவ்வாறு ஒருவருக்கொரு வர் நடந்துகொள்ளவேண்டும் என்று அவை வலியுறுத்துகின்றன. அதன் அடிப்படையில், சமுதாயத்தில் எவ்வளவு பலத்த தாக்கங்களை ஏற்படுத்துபவையாக அவை உள்ளன?

## கிறிஸ்தவமார்க்கமும் சமுதாய அமைப்பும்

மனித அமைப்புகளும் அரசாங்கங்களும் குறையுள்ளவையாகவும், சிலசமயங்களில் துன்மார்க்கமானவையாகவும் இருக்கலாமென அறிந்திருந்தும், அரசாங்கங்களாலும் மதத்தலைவர்களாலும் மோசமான அனுபவங்களை அடைந்திருந்தும், அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியும்படி ஆதிகாலக் கிறிஸ்தவர்களிடம் பவுலும் பேதுருவும் வலியுறுத்தினார்கள். 1பேதுரு 2:13-17; ரோமர் 13:1-10. கிறிஸ்தவர்கள் வரிசெலுத்தவேண்டும் என்றும், கட்டாயக் கடமைகளைச் செய்யவேண்டும் என்றும் கூறினார்கள். முடிந்தவரையிலும், முன்னுதாரணமான குடிமக்களாக கிறிஸ்தவர்கள் வாழவேண்டும்.

***மேலான அதிகாரங்களுக்குக் கீழ்ப்படியவேண்டுமென 1பேதுரு 2:13-17ல் பேதுரு கூறுகிறார்; ஆனால், பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் அப் 5:27-32இல் எவ்வாறு நடந்துகொண்டார்? இதை நாம் எவ்வாறு பார்க்கவேண்டும்?***

கிறிஸ்தவச் சபையின் ஆரம்பகால வெற்றிகளின்நிமித்தம் பேதுருவும் யோவானும் கைதுசெய்யப்பட்டார்கள். அப் 4:1-4. அதிகாரிகளும், மூப்பர்களும், வேதபாரகர்களும் அவர்களை விசாரித்து, இனி அவர்கள் பிரசங்கம்பண்ணக்கூடாதென்று கண்டிப்பாக எச்சரித்து அனுப்பினார்கள். அப் 4:5-23. மறுபடியும் சீக்கிரம் கைதுசெய்யப்பட்டார்கள்; அதிகாரிகள் சொன்னபடி அவர்கள் ஏன் செய்யவில்லை என்று அவர்களிடம் கேட்கப்பட்டது. அப் 5:28. உடனே பேதுரு, ‘மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது’ என்றார். அப் 5:29.

***இந்த வார்த்தைகளில் நமக்குள்ள முக்கியச் சத்தியம் என்ன?***

ஒன்றைச் சொல்லிவிட்டு, இன்னொன்றைச் செய்வதற்கு பேதுரு ஒன்றும் ஒரு மாயமாலக்காரர் அல்ல. தேவனுக்குக் கீழ்ப்படிவதா, மனிதருக்குக் கீழ்ப்படிவதா என்று வரும்போது, அவர் தேவனுக்குதான் கீழ்ப்படிவார். மற்றபடி, கிறிஸ்தவர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாகவும், கீழ்ப்படிந்தும் இருக்கவேண்டும்; சமுதாய மாற்றத்திற்கான நிலைகளுக்கு ஒத்துப்போகவேண்டியிருந்தால் அதற்கு ஒத்துழைக்கவேண்டும். தார்மீகப் பிரச்சனைகள் கேள்விக்குரியாகும்போது, இயேசுவின் போதனையையும் நியதிகளையும் பிரதிபலிக்கும்விதத்தில் சமுதாய மாற்றங்களை சட்டரீதியாக ஊக்குவிப்பதில் கிறிஸ்தவர்கள் ஈடுபடவேண்டும்; அவ்வாறு ஈடுபட்டும் இருக்கிறார்கள். இது எவ்வாறு செய்யப்படவேண்டும் என்பதில் பல காரணிகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன; ஆனால், “ஒரு கிறிஸ்தவர் நேர்மையான, உண்மையுள்ள ஒரு குடிமகனாக இருக்கவேண்டுமானால், சமுதாய முன்னேற்றத்திற்கு அவர் உதவமுடியாது, உதவவும்கூடாது” என்று சொல்வது சரியில்லை.

நம்மைப்போல பிறரையும் நேசிக்கவேண்டும் என்கிற கட்டளையில், மாற்றத்திற்கு துணைநிற்பதும் எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கிறது? விசேஷமாக, அந்த மாற்றமானது மற்றவர்களின் வாழ்க்கையை இன்னும் சிறப்பாகவும் நன்மையாகவும் மாற்றக்கூடியதாக இருக்கும்போது எவ்வாறு துணைநிற்கலாம்?

செவந்த–டே அட்வென்ட்டிஸ்டுகள் நல்ல குடிமக்ககளாக, தேசத்தின் சட்டத்திற்குக் கீழ்ப்படியவேண்டுமென்று எலன் ஒய்ட் கூறினார். உள்ளூர் ஞாயிறு சட்டங்களை வேண்டுமென்றே எதிர்க்கவேண்டாமென் சொன்னார்; அதாவது, தேவன் கட்டளையிட்டுள்ளதுபோல ஏழாம்நாள் ஓய்வுநாளை பரிசுத்தநாளாகக் கைக்கொண்டாலும், ஞாயிறில் வேலைசெய்யக்கூடாதென்கிற சட்டங்களை வேண்டுமென்றே மீறவேண்டியதில்லை. ஆனாலும், ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் சட்டத்திற்கு அட்வென்ட்டிஸ்டுகள் கீழ்ப்படிய வேண்டியதில்லை என்கிறார். ஓர் அடிமை தன் எஜமானிடம் தப்பித்தால், அந்த அடிமையை திரும்ப எஜமானிடமே ஒப்படைக்குமாறு சட்டம்சொல்கிறது. அச்சட்டத்தை அவர் எதிர்த்தார்; அதற்குக்கீழ்ப்படியவேண்டாமென அட்வென்ட்டிஸ்டுகளிடம்கூறினார். "மனிதரின் சட்டங்கள் தேவவார்த்தைக்கும் தேவ சட்டத்திற்கும் விரோதமாக இருக்கும்போது, விளைவுகள் என்னவானாலும் தேவனுக்கே கீழ்ப்படியவேண்டும். ஓர் அடிமையை அவனுடைய எஜமானிடம் விட்டுவிட தேசச்சட்டம் சொல்கிறது; அதற்கு நாம் கீழ்ப்படியக்கூடாது; அந்தச் சட்டத்தை மீறுவதின் விளைவுகளை நாம் சந்தித்தாக வேண்டும். அடிமைகள் யாருடைய சொத்தும் கிடையாது. தேவன்தாம் உண்மையான எஜமான்; தேவனுடைய கையின் கிரியைகளை தன்னுடையதாக்கி, சொந்தங்கொண்டாடுகிற எந்த உரிமையும் மனிதனுக்குக் கிடையாது." – *1T, p 201,202.*

# கலந்துரையாடக் கேள்விகள்

1. *கிறிஸ்தவர்கள் தங்கள் உரிமைகளுக்காக நிற்கக்கூடாதா என்கிற கேள்வியை மீண்டும் கலந்தாலோசியுங்கள். நமது உரிமைகளைப்பற்றியும் சிந்தித்துப் பாருங்கள்.*

2. *கிறிஸ்தவர்களின் தாக்கத்தால் சமுதாயத்தில் நல்ல மாற்றத்ம் ஏற்பட்ட சம்பவங்கள் உண்டா? அச்சம்பவங்களில் நமக்குள்ள படிப்பினைகள் என்ன?*

3. *கிறிஸ்தவர்கள் சமுதாயத்தின் தீமைகளைப் போக்க உதவுவதற்குப்பதிலாக, அந்தத் தீமைகளுக்குத் துணைபோய், அதை நியாயப்படுத்திய சம்பவங்களும் இருக்கின்றன. அச்சம்பவங்களில் நமக்குள்ள படிப்பினைகள் என்ன?*

4. *'ராஜாவைக் கனம்பண்ணுங்கள்.' 1பேதுரு 2:17. அச்சமயத்தில் நீரோதான் ராஜாவாக இருந்திருக்கமுடியும். ஏற்கனவே சீர்கெட்ட வழியில் வந்த மிகச் சீர்கேடான, மோசமான ஒருவன் நீரோ. அப்படியானால், பேதுரு அவ்வாறு சொல்வதில் நமக்குள்ள பாடம் என்ன? 'எல்லாரையும் கனம்பண்ணுங்கள்' என்று அவர் சொல்வது இதை புரிந்துகொள்ள எவ்வாறு உதவுகிறது?*

5. *1பேதுரு 2:21-25ல் சுவிசேஷச் செய்தி எவ்வாறு சொல்லப்பட்டுள்ளது? அவை நமக்குத் தரும் நம்பிக்கை என்ன? நாம் என்ன செய்யுமாறு அவை சொல்கின்றன? அதன்படி நடப்பதற்கு நாம் என்ன செய்யலாம்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)
## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.